2. மேலவை விதி 82-ன் கீழ் விளக்க உரை.

சென்ட்ரல் ஸ்டேஷன் அருகே பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துக்கு ஏற்பட்ட விபத்து குறித்து

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, போக்குவரத்துத் துறை அமைச்சர் என்ற முறையில் நான் இந்த அவைக்கு ஒரு செய்தியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்று காலை பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான வடபழனி—பாரிஸ் வழித்தடத்தில் 17 ஆம் நம்பர் பேருந்து பஸ் ஏ. 831, ரிஜிஸ்டர் நம்பர் எம்.எஸ்.எஸ். 6745 காலை 9½ மணிக்கு விபத்துக்கு உள்ளாயிற்று. வடபழனியிலிருந்து பாரிஸ் திரும்பி வரும்போது, சென்ட்ரல் ஸ்டேஷன் அருகில், டிரைவரின் கருத்துப்படி, பிரேக் பிடிக்காமல்போன காரணத்தினால், வண்டி நிற்காமல் நேராகச் சென்று, சென்ட்ரல் ஸ்டேஷன் 10 ஆம் நம்பர் பிளாட்பாரத்தில் நின்றது. போகும்போது சைக்கிளில் மீன்கூடை ஏற்றிச் சென்ற ஒருவர்மீது மோதியதால் அவர் அந்த இடத்திலேயே மரணம் அடைந்தார். மேலும் அந்த விபத்தில் தற்போதைய தகவல்படி, 14 பேர்களுக்கு காயம் ஏற்பட்டது. அவர்கள் அனைவரும் உடனடியாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தகுந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது. போலிசார் ஒருவர் மாண்டுவிட்டார் என்ற செய்தியை எனக்கு அளித்திருக்கிறார்கள். அந்தப் பேருந்து ஓட்டுநர் முத்தையாவை விபத்து குறித்து விசாரித்ததில், பிரேக் பிடிக்காமல் போன காரணத்தால் விபத்து நேர்ந்துவிட்டதென்று சொல்கிறார். விபத்தின் காரணம் குறித்து பிரேக் இன்ஸ்பெக்டர் ரிப்போர்ட் கேட்கப்பட்டிருக்கிறது. மேலும் விசாரணை தொடரும். விபத்திலே மாண்டுவிட்டவர்களின் குடும்பத்திற்கும், காயமடைந்தவர்களுக்கும் அரசின் சார்பில் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். விபத்து நடந்த இடத்தையும் நான் நேரிலே சென்று பார்த்தேன். மருத்துவ மனைக்கு நேரிலே சென்று, காயமடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு வந்தேன்.

3. கவன ஈர்ப்பு.

நவசக்தி பத்திரிகை அலுவலகம் சென்று பெண்கள் பலர் நவசக்தி ஊழியர்களைத் தாக்கியதன் காரணமாக அப்பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலைமை குறித்து

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்: